**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8074727

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : மாவட்டம் **Tiruvannamalai** PS: காவல்நிலையம் **V&AC** Year: ஆண்டு **2023** FIR No.: மு.த.அ. எண் **03/2023** Date: நாள் **31.03.2023**

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: **The Prevention of Corruption Act 1988 as amended by The PC (Amendment) Act 2018.** Sections பிரிவுகள்: **7**
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் **20.03.2023** Date to : நாள் வரை **30.03.2023**
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **31.03.2023** Time : நேரம் **0630 Hrs**
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **Vol - I** Time : நேரம் **0830 Hrs**

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **Computer Typed**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் **40 Kms North**
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி **House of Tmt. Jeeva, President, Edapirai Village, Polur Tk. Tiruvannamalai Dt.,**
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **Tr.G.Parasakthi** (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **W/o.Govindasamy**
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **Age-43** (d) Nationality : நாட்டினம் **Indian** (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் **Tank Operator** (g) Address : முகவரி **Edapirai Village, Trisur Post, Polur Taluk, Tiruvannamalai District.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**Tmt. Jeeva, Panchayat President,**
**Edapirai Village, Polur Taluk, Tiruvannamalai District.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் ------

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

------

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ------

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ------

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது. திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளராகிய நான் 31.03.2023 ஆம் தேதி காலை 0630 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது புகார்தாரர் திருமதி.G.பராசக்தி, வயது 43/2023, க/பெ கோவிந்தசாமி, எடப்பிறை கிராமம், திரிசூர் அஞ்சல், போளூர் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் நேரில் ஆஜராகி கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். மேற்படி புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர் G.பராசக்தி, வயது 43, க/பெ: கோவிந்தசாமி, எடப்பிறை கிராமம், திரிசூர் அஞ்சல், போளூர் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம் பெறுநர் காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை. ஐயா, நான் போளூர் தாலுக்கா எடப்பிறை கிராமத்தில் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்கு நான்கு பெண் பிள்ளைகள். அதில் மூன்று பெண் பிள்ளைகளுக்கு திருமணம் ஆகிவிட்டது. இளைய மகள்

- இதன் தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

பராசக்தி 31.3.23

31.03.2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. VELMURUGAN
Rank: நிலை DSP No. எண் ..........

சுபா என்னுடன் வசித்து வருகிறார். என்னுடைய கணவர் எடப்பிறை கிராம ஊராட்சியில் டேங்க் ஆப்ரேட்டராக கடந்த 15 ஆண்டுகளாக பணிபுரிந்து கடந்த 31.12.2022 அன்று உடல்நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார். மேலும் என்னுடைய கணவர் (லேட்) கோவிந்தசாமிக்கு 15 ஆண்டுகளுக்கு முன்னர் எடப்பிறை ஊராட்சிமன்ற முன்னாள் தலைவர் சிவலிங்கம் அவர்களால் 08.02.2008 அன்று டேங்க் ஆப்ரேட்டராக பணி நியமன உத்தரவு வழங்கப்பட்டது. என்னுடைய கணவர் இறந்த பின்பு கடந்த 01.01.2023 முதல் எடப்பிறை கிராம ஊராட்சிமன்ற தலைவி திருமதி.ஜீவா அவர்கள் எனது கணவர் விட்டு சென்ற டேங்க் ஆப்ரேட்டர் பணியை என்னை தொடர்ந்து செய்ய சொன்னதின் பேரில் நானும் அவ்வாறே இதுநாள் வரை நான் குடியிருக்கும் எடப்பிறை கிராம பிள்ளையார் கோயில் தெருவில் டேங்க் ஆப்ரேட்டர் பணியை செய்து வருகிறேன். மேலும் எனக்கு இதுநாள்வரை சம்பளம் ஏதும் தலைவி ஜீவா அவர்கள் தரவில்லை. இதனால் என் உடன் பிறந்த அண்ணன் ராஜன் வயது.53 என்பவருடன் தலைவி ஜீவா அவர்களை கடந்த 20.03.2023 அன்று அவருடைய இல்லத்தில் சந்தித்தோம். அப்போது குடும்ப சூழ்நிலை மற்றும் கணவர் இல்லாமல் மிகவும் கஷ்டமாக உள்ளது என்றும் நான்கு பெண் பிள்ளைகளை வைத்து கொண்டு ஜீவணம் செய்ய முடியவில்லை என்றும் சொன்னேன். மேலும் நான்கு மாதம் சம்பளம் எனக்கு நீங்கள் கொடுக்கவில்லை என்றும் கூறினேன். அதற்கு அவர் உங்கள் கணவர் கோவிந்தசாமி பணிபுரிந்த இடத்திற்கு வேறு ஒருவருக்கு வேலை கொடுக்க உள்ளேன் என்று சொன்னார்கள். அதற்கு நான் நம்முடைய எடப்பிறை ஊராட்சியில் நீங்கள் தலைவியாய் இருந்த போதே இறந்துவிட்ட இரண்டு டேங்க் ஆப்ரேட்டர்களின் பணிக்கு அவர்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கே பணி நியமணம் கொடுத்துள்ளீர்கள் என்று நான் சொன்னதற்கு அவர், உனக்கு வேலை கொடுக்க வேண்டும் என்றால் எனக்கு லஞ்சமாக ரூ.5,00,000/- தர வேண்டும் உன்னால் தரமுடியாது என்பதால்தான் வேறு ஒரு நபருக்கு டேங்க் ஆப்பரேட்டர் பணி கொடுக்க உள்ளேன் என்று சொன்னார். நான் அதற்கு கணவர் இறந்து மிகவும் வருமையில் உள்ளேன் என்று நானும் என்னுடன் பிறந்த அண்ணன் ராஜன் அவர்களும் சொல்லியதற்கு அவர் வேண்டுமென்றால் ரூ.50,000/- ஐ குறைத்துக்கொண்டு ரூ.4,50,000/- கொடுத்தால்தான் வேலை என்று கராராக சொல்லி அனுப்பிவிட்டார். அதன்பின் 29.03.2023 அன்று நான் நேரில் சென்று மீண்டும் தலைவி ஜீவா அவர்களை சந்தித்தேன். அப்போது அவர் பணத்துடன் வந்தீர்களா என கேட்டார் அதற்கு நான் இல்லை என்று

சொன்னேன். பணம் இல்லாமல் என்னை பார்க்க வரவேண்டாம் என்று சொல்லிவிட்டார். அதற்கு நான் உங்களிடம் என் அண்ணன் ராஜன் பேசுவார்கள் என்று சொன்னேன். அதற்கு அவர் யார் பேசினாலும் எனக்கு முன் தொகையாக ரூ.25,000/- கொடுத்தால்தான் பணிக்கு வேறு நபர்களை என்னால் போடாமல் இருக்க முடியும் என்று என்னிடம் கராராக சொல்லிவிட்டார். இது சம்மந்தமாக என் அண்ணனிடம் இந்த தகவலை தெரிவித்தேன். அவர் நான் பேசிக்கொள்கிறேன் என்று சொல்லி, அவ்வாறே 30.03.2023 அன்று காலை சுமார் 10.30 மணிக்கு அவருடைய தொலைபேசி எண்.9840044057-ல் இருந்து தலைவி ஜீவா தொலைபேசி எண்.9019455871-ற்கு தொடர்பு கொண்டு பேசிய போது என்னிடம் சொல்லியவாறே ரூ.25,000/- லஞ்சமாக கொடுத்தால்தான் டேங்க் ஆபரேட்டர் பணியை வேறு ஒருவருக்கு பணி ஆணை வழங்காமல் இருக்க முடியும் என்று என் அண்ணனிடம் சொல்லியதாக என் அண்ணன் என்னிடம் தெரிவித்தார். மேலும் ஊராட்சி மன்ற தலைவி ஜீவா அவர்களால்தான் பணிக்கு ஆணை வழங்க முடியும் என்பதை நான் நன்கு தெரிந்துள்ளேன். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாத காரணத்தால் என்னிடம் லஞ்ச பணம் கேட்ட எடப்பிறை தலைவர் திருமதி.ஜீவா மீது நடவடிக்கை மேற்கொள்ள எனக்கு தெரிந்த நபர் மூலம் கணினியில் தட்டச்சு செய்து தங்களிடம் புகார் மனு அளிக்கிறேன். என்னிடம் லஞ்சம் கேட்ட அதிகாரி மீது நடவடிக்கை எடுக்குமாறு பணிந்து கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (SdXXXXXX) G.பராசக்தி 31.03.2023.

Sir,

Received the complaint on 31.03.2023 at 0630 hrs and a discreet enquiry was made on the general reputation of the accused officer and it is learnt to be bad. The motives, reliability and the antecedents of the informant was also quickly verified and found nothing adverse. Since the information contained in this complaint discloses a cognizable offence, today on 31.03.2023 at 0830 hrs a case was registered in Tiruvannamalai V&AC Cr.No.03/2023, u/s 7 of the Prevention of Corruption Act 1988 as amended by the PC (Amendment) Act 2018. The FIR in original along with the complaint was sent to the Hon'ble Special Judge Cum CJM, Tiruvannamalai and sent the copies to the officers concerned. (Sd/-XXXXX) 31.03.2023. S.Velmurugan, Deputy Superintendent of Police, V&AC, Tiruvannamalai.

31.03.2023
(C.S. VELMURUGAN
DSP V&AC TVM)